செய்தி வெளியீடு எண் : 956 நாள் : 18.05.2023

**செய்தி வெளியீடு**

**தமிழ்நாடு முழுவதும் சிகரெட் லைட்டர் விற்பனை செய்யும் கடைகள், மீன் மார்க்கெட்டுகள் மற்றும் இறைச்சிக் கடைகளில் தொழிலாளர் துறை அமலாக்க அதிகாரிகள் சிறப்பாய்வு.**

சட்டமுறை எடையளவுகள் சட்டம் மற்றும் விதிகளின் கீழ் 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. சி.வி.கணேசன் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. முகமது நசிமுதீன், இ.ஆ.ப., அரசு முதன்மை செயலாளர் மற்றும் தொழிலாளர் துறை ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், இ.ஆ.ப., அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு முழுவதும் மீன் மார்க்கெட்டுகள் மற்றும் இறைச்சிக் கடைகள், குளிர்பானங்கள் மற்றும் தண்ணீர் பாட்டில்கள் விற்பனை செய்யும் கடைகள், சிகரெட் லைட்டர்கள் விற்பனை செய்யும் கடைகள் உள்ளிட்ட 2891 கடைகளில் மாநிலம் முழுவதும் உள்ள சட்டமுறை எடையளவு அதிகாரிகளால் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டதில், 775 விதிமீறல்கள் இருப்பது கண்டறியப்பட்டது. மேற்படியான விதிமீறல்களுக்கு ரூ.5000/- வரை அபராதம் வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எடை குறைவாக விநியோகம் செய்தல், முத்திரை / மறுமுத்திரையிடாமல் எடையளவுகளை வணிகம் நடைபெறும் இடத்தில்

வைத்திருத்தல், பரிசீலனை சான்றுகளை வெளிக்காட்டி வைக்காமை மற்றும் தரப்படுத்தப்படாத எடையளவுகளை பயன்படுத்துதல், பொட்டலப்பொருட்கள் விதிகளின் கீழ் அறிவிக்கப்பட்ட உரிய அறிவிப்புகள் இல்லாதிருத்தல், அதிகபட்ச சில்லறை விற்பனை விலையைவிட கூடுதல் விலைக்கு விற்பனை செய்தல் போன்ற விதிமீறல்கள் ஆய்வுகளின்போது காணப்பட்டால் சட்டப்படியான நடவடிக்கை தொடரப்படும் என்றும் வணிகர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது, இத்தகவல்களை சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு அதிகாரி முனைவர் உ. லட்சுமிகாந்தன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in